கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கர்ப்பிணிகள் கூட, அந்த கேட் மூடியிருக்கின்ற நேரத்தில், உடனடியாக மருத்துவ மனைக்கு வரமுடியாத காரணத்தால், இறந்துபோகும் நிலைமைகள் கூட இருந்து இருக்கின்றன. ஆகவே, அரசு இதையெல்லாம் மனதில் கொண்டு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே மேம்பாலம் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால் மத்திய அரசின் ஒப்புதல் தேவை. அது கிடைத்தால் தான் செய்ய முடியும். இப்படிப்பட்ட ரயில்பாதைகள் மீது மேம்பாலம் கட்டுகிற நேரத்தில் 50 சதவீதம் செலவை ரயில்வே துறையும், 50 சதவீதம் செலவை அங்கேயிருக்கிற நகராட்சியோ அல்லது ஒன்றியமோ ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்று ரயில் பாதை குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்குவது இல்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

நகரரட்சிகளில் பன்றிகள் வளர்க்கத் தடை.

*வினா எண். 570—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளில் பன்றி வளர்க்க தடை செய்யப்பட் டுள்ளதா ?

(ஆ) பன்றிகளால் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிகளில் பன்றிகள் வளர்க்க தடை செய்யப்படவில்லை. ஆனால் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் பன்றிகள் உள்பட எல்லா பிராணிகளுக்கும் வரிவிதிக்கவும், உரிமம் பெறாமல் வைத்திருக்கும் பன்றிகளை அழிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிலுள்ள தாய்மார்கள் காலை தலே வீட்டிற்கு முன்னால்சாணம் தெளித்து அழகாகக் கோலம்

1982 மார்ச் 20]

போட்டு, அழகு பார்த்து விட்டு, வீட்டு வேலைகளை முடித்து அவர்கள் கணவன் மார்களை வேலைக்குச் செல்ல வெளியே அனுப்பும்போது, வாசலில் வந்து பார்க்கிற நேரத்தில், அங்கே அந்தப் பன்றிகள் செய்துவைக்கிற ஆபாசத்தைக் கண்டு குமுறிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே வெளியே செல்லக் கூடிய கணவன் மார்களும் வெளியில் வரும்போது, வீட்டுக்கு வெளிப்புறத்தில் உள்ள சாக்கடைகளில் அந்தப் பன்றிகள் செய்து வைக்கும் மோசமான நிலைகளைக் கண்டு அருவறுப்பு அடை கிறார்கள். ஆகவே அரசு இந்தச் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, சாயாரண மக்களுடைய எந்த சாதாரண வேண்டு கோளையும் இந்த அரசு நிறைவேற்றி வைக்கும் என்பதற்கு இணங்க, அந்தப் பன்றிகளை அறவே ஒழிக்க அரசு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாய்மார்கள் காலையிலே போடும் அழகான கோலங்களை யெல்லாம் பன்றிகள் அலங்கோலமாக மாற்றுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை யெல்லாம் அறிந்துதான், வளர்க்கிற பிராணிகள் எந்தப் பிராணிகளாக இருந்தாலும் உரிமம் பெறவேண்டும் உரிமம் பெறாமல் வளர்க்கக்கூடாது என்று விதியிடப்பட்டிருக் கிறது. ஆகவே, அப்படி உரிமம் பெறாமல் யார் யார் பன்றிகளை வளர்த்துக் கொண்டிருந்தாலும், அந்தப் பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஊக்க போனஸ் என்று சொல்கிற வகையில் ஒரு பன்றிக்கு 5 ரூபாய் வீதம் பணம் கொடுத்து வாங்கி, அந்தப் பன்றிகளை நகராட்சிகளின் ஓரத்திலே கொண்டு போய் வளர்ப்பதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த நடவடிக்கைகளை அமுல் படுத்தும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நிலைமைகளை சரி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். எ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஊக்க போனஸ் அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள் பொதுமக்கள் அந்தப் பன்றிகளை பிடிக்கச் சென்றால், சில ஊர்களிலே குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த வர்கள்தான் இந்தப் பன்றிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார் கள். அவர்கள் வந்து ஏன் என்னுடைய பன்றிகளை பிடித்துக் கொடுத்தீர்கள் என்று ரோட்டிலேயே தகராறு செய்து அடிதடி கலாட்டா வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, எப்படி நாய்களுக்கு லைசன்ஸ் இல்லையென்றால் நகராட்சி ஊழியர் களைக் கொண்டு பிடிக்கிறீர்களோ அப்படியே இந்தப் பன்றி களையும் பிடித்து சுடுவதற்கு அரசே ஒரு ஏற்பாட்டை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.



TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 20

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, காக்காய் வேண்டுமானாலும் பிடித்து விடலாம். ஆனால் பன்றிகளை பிடிப்பது என்பது மிகப்மிகப் பெரிய கஷ்டம். அது மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்குத் தெரியும். ஆகவே அது எவ்வளவு கடினமான காரியம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையினால்தான் பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 5 ரூபாய் என்று கொடுத்தால், பன்றிகளை பிடித்துக் கொடுக்கயாராவது முன் வருவார்கள் என்று கருதித்தான் இந்த ஊக்கபோனஸ் முறையை வைத்திருக்கிறோம். பன்றிகளை பிடித்து சுடுவது என்பது முடியாது. ஏனெனில் நகராட்சி அலுவலகங்களிலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் இருக்கும் கடைநிலை ஊழியர்கள்தான் இந்தப் பன்றிகளை வளர்க்கின்றனர். ஆகவே அதன்மூலம் அவர்களுக்கு வரும் வருமானத்தை அரசு தடைசெய்ய விரும்பவில்லை. ஆகவே நான் இந்த மன்றத்தின் வாயிலாக அந்தத் தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அந்தப் பன்றிகளை தயவுசெய்து நகராட்சிகளின் ஓரங்களில், ஊராட்சிகளின் ஓரங்களில் வைத்து வளர்க்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே பன்றிகளினால் மூளைக் காய்ச்சல் நோய் வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த பன்றிகளை அறவே ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்கள் வருவதற்கு பன்றிகள் காரணமாக இருக்கின்றன என்பதை விஞ்ஞான நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜப்பானிய வைரஸ் என்ற கிருமி உற்பத்தியாவதற்கும் இது போன்ற பன்றிகள்தான் காரணமாக இருக்கின்றன. என்று சொல்லப்படுகிறது. அது மட்டும் அல்ல கொசுக்கள் அந்தப் பன்றிகளை கடிப்பதன் மூலமாக கியூலாஸ் என்கிற கிருமிகளை பெற்று, இங்கே வந்து மனிதனைக் கடிப்பதன் மூலமாக அதை பரப்புகிறது என்றெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் விளைவாகத்தான் மூளைக் காய்ச்சல் மற்றும் சில நோய்கள் ஏற்படுகின்றன. ஆகவேதான் இப்படிப்பட்ட பன்றிகளை உடனடியாக அகற்றும் வேலையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.